# මුදල් අමාත්‍යාංශය
# நிதி அமைச்சு
# MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: CGO/ASM/Policy/Cir/ (VOL II)
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2022.01. 25

**ஆதன முகாமைத்துவ சுற்றுநிருப இல. 04/2022**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
பொதுக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்
அரச வங்கிகள் மற்றும் அரச உடமைக் கம்பனிகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**அரசாங்கத்தின் நிதியல்லா ஆதன முகாமைத்துவம்**
**பொதுச் சொத்துக்கள் அழிவடைவதையும் அதனால் அரசாங்கத்துக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதையும் தடுப்பதற்கு, அரசுக்குச் சொந்தமான வாகனங்களை முறையாகப் பயன்படுத்துதல் மற்றும் சரியான நேரத்தில் அகற்றுதல்**

அமைச்சரவையினால் வழங்கப்பட்ட பணிப்புரையினைத் தொடர்ந்து 2020 அக்டோபர் 02 அன்று வெளியிடப்பட்ட 05/2020 ஆம் இலக்க சொத்துகள் முகாமைத்துவச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்குப் பின்னரும் இயங்காத வாகனங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் பயன்படுத்துதல் அல்லது அகற்றுதல் ஆகியவற்றின் முன்னேற்றம் திருப்திகரமாக இல்லை என்பதைக் கருத்திற் கொண்டு, சொத்துக்கள் அழிந்து போவதையும் அரசுக்கு வருமானம் இழப்பதைத் தடுப்பதற்காக 2022 சனவரி 10 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், வாகனங்களை சரியான நேரத்தில் பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

02. இதன்படி, அமைச்சுகள், திணைக்களங்கள், விசேட செலவின நிறுவனங்கள், அரச தொழில்முயற்சிகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள் உட்பட அனைத்து அரசாங்க நிறுவனங்களின் தலைவர்களும் பின்வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்:

**அ. இயங்கும் நிலையில் இல்லாத மற்றும் பழுதுபார்ப்பு சிக்கனமற்ற வாகனங்களை அப்புறப்படுத்துதல்**

2020 ஆகஸ்டு 31 ஆந் திகதி கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்ட, இயங்காத மற்றும் பழுதுபார்ப்பு சிக்கனமற்ற இதுவரை அப்புறப்படுத்தாத வாகனங்களை ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2020 இன் பிரிவு 02 (அ) இல் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி, சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களின் தலைவர்கள், அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை விரைந்து எடுத்தல் வேண்டும்.

**ஆ. இயங்கும் நிலையில்லாத மற்றும் பழுதுபார்ப்பு சிக்கனமாக உள்ள வாகனங்களை பழுதுபார்த்து பயன்படுத்துதல்**

2020 ஆகஸ்டு 31 ஆந் திகதியன்று கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்ட, இயங்காத மற்றும் பழுதுபார்ப்பு சிக்கனமான வாகனங்களை இதுவரை சீர்செய்யாத அரச நிறுவனங்களின் சம்பந்தப்பட்ட தலைவர்கள், ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2020 இன் பிரிவு 02 (ஆ) இல் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி அவற்றை பழுதுபார்க்கும் பணியை துரிதப்படுத்தல் வேண்டும்.

**இ. பொதுச் சொத்துக்கள் அழிவடைவதையும், அரசாங்கத்துக்கு வருமானம் இழப்பு ஏற்படுவதையும் தடுப்பதற்கு, அரசுக்குச் சொந்தமான வாகனங்களை முறையாகப் பயன்படுத்துதல் மற்றும் சரியான நேரத்தில் அகற்றுதல்**

சுற்றறிக்கையின் மூலம் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட போதிலும், குறித்த அரசாங்க நிறுவனங்கள் வாகனங்களை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க தாமதிப்பதால், இன்னும் பழுதுபார்க்க அல்லது அகற்றப்பட வேண்டிய ஏராளமான வாகனங்கள் அரசாங்க நிறுவனங்களிடம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்படி, அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், பொதுச் சொத்துக்கள் அழிவடைவதன் மூலம் அரசாங்கத்துக்கு வருமான இழப்பு ஏற்படுவதைத் தடுத்தல் அரச நிறுவனங்களின் தலைவர்களது கடமையான செயற்பாடுகள் என்ற வகையில் உரிய பராமரிப்புடன் வாகனங்களைப் பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் கவனக் குறைவாகப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதுடன் குறித்த சுற்று நிருபங்களுக்கு அமைவாக வாகனங்களை உரிய நேரத்தில் அப்புறப்படுத்துவது என இதன் மூலம் வலியுறுத்தப்படுகிறது.

03. மேலே (02) (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தலின்படி அப்புறப்படுத்தப்பட்ட அல்லது பழுதுபார்க்கப்பட்ட வாகனங்களின் தொடர்புடைய தகவல்களை அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்காக 2022 ஏப்ரல் 30 ஆந் திகதிக்கு முன்னர், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பின்படி, கொம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**ஒப்பம்/எஸ்.ஆர். ஆட்டிகல**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்
5. மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர்
6. கணக்காய்வாளர் நாயகம்